1978 மார்ச் 21]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : எங்கெல்லாம் வீட்டு வாடகைப்படி கொடுக்கப்பட வேண்டுமோ அங்கெல்லாம் உரிய வீட்டு வாடகைப்படி கொடுக்கப்பட்டுதான் வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோவில்பட்டியைப் பற்றி குறிப்பிட்டார்கள், அதற்கான விவரம் தற்போது என்னிடமில்லை

புதுக்கோட்டையில் பேருந்து நிலையம்.

*648 வினா—திரு. த. புஸ்பராஜு : மாண்புமிகு உள்ளாட்சித் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) புதுக்கோட்டையில் புதிய பேருந்து நிலையம் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) மற்றும் (ஆ) ; புதுக்கோட்டையில் புதுக்கோட்டை நகராட்சியால் ரூபாய் ஒன்பது லட்சம் செலவில் புதிய பேருந்து நிலையம் (முதல் பகுதி) அமைப்பதற்காக அரசு 27—5—77-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

திரு. த. புஸ்பராஜு : பேரவைத் தலைவரவர்களே, புதுக்கோட்டையில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு லோன் கொடுக்கப்படுதவதாகச் சொன்னார்கள். ஆனல் இதுவரை சாங்ஷன் ஆகாமல் இருப்பதாகத் தெரிகிறது. ஆதலால் இந்த பேருந்து நிலைய வேலை – தொடக்க வேலை ஆரம்பிக்கப்பட்டு வேலை அத்துடன் நின்றுவிட்டது. எவ்வளவு சீக்கிரமாக இந்த வேலை ஆரம்பிக்கப்படும் ? எப்போது முடிவு அடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : கடன் வழங்கப்பட்டு விட்டது என்று ஏற்கனவே நான் தெரிவித்தேன். தலைமைப் பொறியாளரின் வரைபடம் தயாரானவுடன் வேலை ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடம் கட்டக்கூடிய நேரத்தில் பயணிகள் தங்குவதற்கு அறைகள் கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதைப்பற்றிய விவரம் இல்லை. பேருந்து நிலையத்திற்கு தேவைப்படும் வசதிகள் முழுமையும் அமையக்கூடிய வகையில் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். எம். ஏ. ரசாக் : பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையங்களில் இருக்கின்ற எல்லா கழிப்பிடங்களும் அசுத்தமாக இருக்கின்றன. ஆகவே கழிப்பிடங்களை சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு ஏதாவது கட்டணம் வசூலித்து, அவற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : எல்லா பேருந்து நிலையங்களிலும் உள்ள கழிப்பிடங்கள் அசுத்தமாக இருக்கின்றன என்ற கருத்தை ஏற்க முடியாது. எங்கெங்கு இப்படியிருக்கிறது என்று குறிப்பிட்டு தெரிவித்தால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கலாம்.

அரியலூர் ஊராட்சி.

*649 வினு—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா ?

அரியலூர் பஞ்சாயத்தை முனிசிபாலிட்டியாக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆம்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, ஐந்து லட்சம் வருமானம் உள்ள பெரிய நகராட்சிகள்கூட நிர்வாகத்தை சரியாக நடத்த முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் இரண்டு லட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடிய பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றலாம் என்பது முறையாகாது. ஆகவே, ஐந்து லட்சத்திற்குக் குறைவாக இருக்கின்ற பேரூராட்சிகளை நகராட்சியாக மாற்றுமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அப்படி ஒட்டு மொத்தமாகச் செய்ய இயலாது. குறிப்பிட்ட பேரூராட்சிகளில் இருக்கின்ற நிலைமையைப்பற்றி தெரிவித்தால் அதைப்பற்றி அரசு ஆலோசித்து முடிவு எடுக்கும்.

திரு. த. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் பேரூராட்சி மன்றம் இதற்காகத் தீர்மானம் போட்டு, நிறைவேற்றி, அதை கோட்ட வளர்ச்சி அதிகாரியும், மாவட்ட ஆட்சித்தலைவரும் நகராட்சியாக மாற்றுவதற்கு இதற்கு தகுதி இருக்கிறது என்று தீர்மானத்தை இங்கு அனுப்பியிருக்கிருர்கள். எந்த ஆண்டில் நகராட்சியாக மாற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.